# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

**OS.No.**110/2018

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | | திரு. இந்திரஜித் | ஊர் | : | விசாலட்சி நகர் |
| த.பெ. | : | திரு.ஜெகதீசன் | மாவட்டம் | : | தஞ்சாவூர் |
| வயது | : | 72 | தொழில் | : | காவல்பணி ஒய்வு |

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 25-ஆம் நாள் **வா .சா. 2 ன்** வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54-வது விதியின் 95வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.D.சுரேந்தர் மொழிபெயர்ப்பாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

முதல் விசாரணை

சாட்சியத்தின் முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விபரங்கள் எல்லாம் நான் சொன்னவைதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் இறுதியில் பஞ்சாயத்தார்கள் என்ற பகுதியில் உள்ள கையெழுத்துக்களில் 2வது கையெழுத்து என்னடையதாகும். அதே பஞ்சாயத்தார்கள் பகுதியில் 1வது கையெழுத்து ஆறுமுகம் என்பவருடையது, 3வது கையெழுத்து உதயகுமாருடையது, 4வது கையெழுத்து கண்ணன் என்பவருடையது, 5வது கையெழுத்து கார்த்திகேயன் என்பவருடைதாகும். பஞ்சாயத்தார் கையெழுத்து முன்பாக இடதுபக்கத்தில் ஓஆர்ஜே குடும்பத்தார்கள் கையெழுத்து போட்டுள்ளார்கள் அதில் முதல் கையெழுத்து ஓஆர்ஜே ஜாபருடையது, 2வது கையெழுத்து ஜாபரின் மனைவி பத்ரூநிஷாவுடையது, 3வது கையெழுத்து ஜாபரின் மகன் ஜமால் முகமதுடையது. அதேபோல் வலதுபக்கத்தில் சுந்தரம் குடும்பத்தார்கள் கையெழுத்துபோட்டுள்ளார்கள். 1வதாக சுந்தரம் கையெழுத்து உள்ளது, 2வதாக அவரது மனைவி சுலோட்சனா கையெழுத்து உள்ளது.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

வாதியின் குடும்ப தொழில் சம்மந்தமாக கணக்கு வழக்குகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. யார் என்னை பஞ்சாயத்து பேச அழைத்தது என்றால் ஜாபர் அழைத்தார். பஞ்சாயத்து அழைத்தபோது என்னிடம் என்ன பிரச்சனை புகார் கொடுத்தது

போன்ற விஷயங்களை என்னிடம் சொன்னாரா என்றால் சொன்னார். பஞ்சாயம் பேசிய தேதியில் புகார் நடைமுறையில் இருந்தது என்றால் இருந்தது. அந்த புகார் யார்யார் மேல் கொடுக்கபட்டிருந்தது என்றால் சுந்தரம் மற்றும் அவரது மகள் பிருந்தா. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் தொழில் பற்றி தெரியும் என்று சொல்லியுள்ளேனே பிருந்தா நிர்வாக பங்குதாரராக இருந்தாரா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 பஞ்சாயத்து ஆவணத்தை யார் எழுதியது என்றால் கார்த்திகேயன் எழுதினார். அங்கு பிருந்தா வந்தாரா என்றால் வரவில்லை. காவல்நிலையத்திற்கு நான் போனேனா என்றால் போகவில்லை. ஜாபர்பாட்சா தரப்பில் யார்யார் வந்தார்கள் என்றால் ஜாபர் பாட்சா மகன் ஜமால் முகமுது, அவர் மனைவி. மற்ற பஞ்சாயத்தார்களை எனக்கு தெரியாது என்றால் சரியல்ல தெரியும். அவர்கள் எந்த ஊரை சேர்ந்தவர்கள் என்றால் உதயகுமார், கண்ணன் வத்தலகுண்டை சேர்ந்தவர்கள். தற்போது என்னிடம் காண்பிக்கபடும் ஆவணத்தில் எழுதியதாக கார்த்திகேயன் கையெழுத்து போடவில்லை என்றால் பஞ்சாயத்தராகதான் போட்டுள்ளார். ஏற்கனவே எவ்வளவு பணம் பாக்கியுள்ளது என்று ஜாபர்பாட்சா புகார் கொடுத்ததாக என்னிடம் சொன்னாரா என்றால் சொன்னார் ரூ.1,12,00,000/-. இவ்வளவு பெரிய தொகைக்கு ரூ.20,00,000 த்திற்கு முடிக்கிறோமே என்று கேட்டேனா என்றால் கேட்கவில்லை.20லட்சத்தோடு ஏற்கனவே பெருங்களூரில் உள்ள 3ஏக்கர் 12சென்ட் நிலத்தை சுந்தரத்தின் மனைவி பெயரிலுள்ள கிரையத்தை ரத்து செய்து ஜாபர் மனைவியிடம் கொடுப்பதாக பேசபட்டது. மேற்படி ரத்து செய்யும் விஷயம் வா.சா.ஆ.2இல் எழுதபட்டுள்ளதாக என்றால் உள்ளது. புதுகோட்டை நீதிமன்றத்தில் வழக்கு போட்டுள்ளதாக ஜாபர் சொன்னாரா என்றால் சொன்னார். காவல்நிலையத்தில் நிலுவையிலுள்ள புகாரை நிபந்தனையின்றி திரும்ப பெறுவதாக வா.சா.ஆ.2இல் உள்ளது என்றால் ஆமாம். பேசியதன் முதல் நோக்கம் புகாரை வாபஸ் வாங்குவது முக்கிய நோக்கம் என்றால் சரியல்ல. பிருந்தா ஏன் வரவில்லை என்று பஞ்சாயத்து பேசும்போது கேட்டோமா என்றால் இல்லை. பிருந்தா மேற்படி வியாபார நிறுவனத்தில் கணக்கு வழக்கு பிரிவில் பணியாற்றியபோது முக்கியமான ஆவணங்களை எடுத்துபோய்விட்டதாக சொன்னார்கள். புகார் கொடுக்கும் விபரம் கொடுப்பதற்கு முன்பாக என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தில் கையெழுத்திட்டதன் நோக்கமே போலிஸில் கொடுத்த புகாரை முன்னிலைபடுத்தி

சுந்தரம் குடும்பத்தாரை வற்புறுத்தி வா.சா.ஆ.2 ஆவணம் எழுதி வாங்குவது என்றால் சரியல்ல. ஜாபர் என்னுடைய குடும்ப நண்பர் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.03.25 16:19:06 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**

**தஞ்சாவூர்.**